**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S. 70/2020**

2025—ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.2 சங்கர், வயது 58 , த/பெ வேலாயுதம்**

**குறுக்கு விசாரணை**

எனக்கு வாதி மற்றும் பிரதிவாதியை தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் பெயர் குப்புசாமி மற்றும் கோகுல கிருஷ்ணன் ஆகும். குப்புசாமி என்பவர் எங்கு வசிக்கிறார் என்றால் களம்பூரில் வசிக்கிறார். கோகுலகிருஷ்ணன் என்பவர் எங்கு வசிக்கிறார் என்றால் ஆரணியில் உள்ள சைதாப்பேட்டையில் வசிக்கிறார். கோகுலகிருஷ்ணன் வசிக்கும் வீடு யாருடையது என்றால் முத்துசாமி, லட்சுமி என்பவர்களுக்கு சொந்தமான வீடாகும். அதில் தற்போது கோகுல கிருஷ்ணன் வசித்து வருகிறார். மேற்படி இடத்தில் எத்தனை வருடங்களாக கோகுலகிருஷ்ணன் வசித்து வருகிறார் என்றால் 3 வருடங்களாக வசித்து வருகிறார்.

2. மேற்படி லட்சுமி அம்மாள் 3 வருடங்களாக அவருடன் சேர்ந்து வசித்து வந்தார்களா என்றால் அவர் இறந்த பிறகுதான் கோகுலகிருஷ்ணன் அங்கு வந்தார். குப்புசாமி என்பவர் அந்த வீட்டில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. 10 வருடத்திற்கு முன்னர் அந்த வீட்டில் இருந்தார். சாட்சி தன்னிச்சையாக முத்துசாமி மற்றும் லட்சுமியம்மாள் உயிரோடு இருக்கும் காலம் வரை குப்புசாமி அந்த வீட்டில் வசித்து வந்தார். அப்போது அவர் களம்பூரில் வசிக்கவில்லையா என்றால் மேற்படி லட்சுமியம்மாள் மற்றும் முத்துசாமி ஆகியோர் அவருக்கு சித்தி சித்தப்பா என்ற உறவு முறை என்பதால் அவர்களுக்கு பிள்ளைகள் இல்லை என்பதால் இவர் அவ்வப்போது வந்து பார்த்து செல்வார்.

3. முத்துசாமி, லட்சுமியம்மாளுக்கு குப்புசாமி என்ன உறவு முறை என்றால் லட்சுமி அம்மாளின் அக்கா மகன் ஆவார். அக்கா பெயர் எனக்கு தெரியாது. முத்துசாமி, லட்சுமியம்மாளுக்கு கோகுலகிருஷ்ன் என்ன உறவு முறை என்றால் உறவுகாரர்தான். ஆனால் என்ன முறை உறவுகாரர் என்று எனக்கு தெரியாது. மேற்படி லட்சுமியம்மாளுக்கு யார் கொள்ளி வைத்தார்கள் என்றால் யாரும் அவருக்கு கொள்ளி வைக்கவில்லை. மேற்படி வாதி மற்றும் பிரதிவாதி அவரின் இறப்பிற்கு வந்தார்களா என்றால் வந்தார்கள். ஆனால் யாரும் கொள்ளி போடவில்லை என்றால் போடவில்லை.

4. மேற்படி கொள்ளியை யாரும் போடவில்லை என்றால் வாதியும், பிரதிவாதியும் நான் நீ என்று கொள்ளி போட தகராறு செய்து கொண்டதால் யாரும் கொள்ளிப் போடவில்லை. ஊர்க்காரர்கள் மற்றும் பஞ்சாயத்து காரர்கள் யாரும் சமாதானம் செய்யவில்லை. முத்துசாமி எப்போது இறந்தார், யார் கொள்ளிப்போட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த தேதி வரை முத்துசாமிக்கு யார் கொள்ளிப்போட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையொப்பம் இட்டதாக சொல்லியுள்ளேன், அது எதற்காக போட்டேன் என்றால் 2009ல் லட்சுமியம்மாளும், முத்துசாமியும் என்னை அழைத்தார்கள். சார்பதிவாளர்

அலுவலகத்தில் மேற்படி நபர்கள் குப்புசாமிக்கு வீடு எழுதி வைத்ததற்காக என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டதால் நான் போட்டேன். அவர்கள் உயிரோடு இருக்கும் போது அப்படி ஒரு பத்திரத்தை ஏற்படுத்த என்ன காரணம் என்றால் அவர்களுக்கு வயதாகி விட்டதால் இவர் அ வர்களை பராமரித்து வந்ததால் அவர்கள் மேற்படி பத்திரத்தை குப்புசாமி பெயருக்கு எழுதி வைத்தார்கள். மேற்படி 2 நபர்கள் கடைசி காலம் வரை அந்த வீட்டில்தான் வசித்து வந்தார்கள் என்றாலும், அவர்களை யார் பராமரித்து வந்தார்கள் என்றால் குப்புசாமி என்பவர்தான் பராமரித்து வந்தார்.

5. மேற்படி 2 நபர்களுக்கும் முதியோர் பென்சன் தொகை வந்தது என்றால் சரிதான். முத்துசாமி' உயிரோடு இருந்தவரை லட்சுமியம்மாளை அவர்தான் கவனித்து வந்தார் என்றால் சரிதான். லட்சுமியம்மாள் கணவர் இறந்த பிறகுதான் அவரை கவனித்து கொள்ள ஆள் இல்லாத காரணத்தால் வாதியும், பிரதிவாதியும் நான், நீ என சண்டை போட்டுக் கொண்டார்கள் என்றால் சரிதான். என் வீட்டின் கதவு எண் என்ன என்றால் 22 ஆகும். குப்புசாமி வீட்டின் கதவு எண் 21 ஆகும்.

6. சோமசுந்தரம் மகன் சீனிவாசன் என்பவர் வீட்டின் கதவு எண். 32/33டி என்ற விலாசத்தில் உள்ளார் என்றால் சரிதான். அதேப்போல் பச்சையப்பன் மகன் பழனிவேல் கதவு எண்.33சி என்ற விலாசத்தில் உள்ளார் என்றால் சரிதான். லட்சுமியம்மாள் என்பவர் 13.02.2019 அன்று 2009ம் ஆண்டு ஏற்படுத்திய உயிலை ரத்து செய்து விட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விவரத்தை குப்புசாமி என்பவர் என்னிடம் சொல்லவில்லையா என்றால் சொல்லவில்லை. 21.09.2020 அன்று லட்சுமியம்மாள் காலமாகி விட்டார் என்றால் சரிதான்.

7. 13.02.2019ல் மேற்படி 2009ம் ஆண்டு உயிலை ரத்து செய்து அதே தேதியில் இன்னொரு உயிலை லட்சுமியம்மாள் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி 2019 உயிலில் வடவான்டை பாதி குப்புசாமி என்பவருக்கும், தென்னான்டை பாதி கோகுலகிருஷ்ணன் என்பவருக்கும் எழுதி வைத்தார்கள் என்ற விவரத்தை எனக்கு குப்புசாமி சொன்னாரா என்றால் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி விவரத்தை குப்புசாமி என்னிடம் சொல்லவில்லை. மேற்படி 2019ம் ஆண்டு உயிலில் சீனிவாசன் மற்றும் பழனிவேல் இருவரும் சாட்சிகளாக கையெழுத்து இட்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

8. மேற்படி எல்லா விவரங்களையும் குப்புசாமி என்னிடம் சொல்லிதான் சாட்சியம் அளிக்க அழைத்தார் என்றாலும் தற்போது நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 2019ம் வருடம் உயில் எழுதிய பின்னிட்டு கோகுலகிருஷ்ணன் என்பவர்தான் லட்சுமியம்மாளை கடைசி காலம் வரை பராமரித்து வந்தார் என்றால் சரிதான். முத்துசாமி இறந்த பிறகு லட்சுமியம்மாளை கோகுலகிருஷ்ணன்தான் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. குப்புசாமி சிறிது காலமும், கோகுலகிருஷ்ணன் சிறிது காலமும் பராமரித்து வந்தார்கள்.

9. மேற்படி லட்சுமியம்மாளை வீட்டை விட்டு வெளியேற்றி கதவை பூட்டு போட்டதால் லட்சுமியம்மாள் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ இடத்திற்கு காவலர்கள் வந்து தான் பூட்டை திறந்து வைத்தார்கள் என்ற

விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2009ல் ஏற்பட்ட உயில் 2019ல் ரத்தாகி அதே தேதியில் வேறு உயில் ஏற்பட்ட காரணத்தினால் மேற்படி 2009 உயில் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. ஆகையால் மேற்படி 2009 சாட்சி கையொப்பம் இட்ட உயில் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. 13.02.2019 அன்று ஏற்பட்ட உயில்தான் சட்டப்படி செல்லும் என்றாலும் அதன்படிதான் சொத்தை பாகம் பிரித்து எடுத்து கொள்ள வேண்டும் என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi,
District Munsif,
District Munsif Court,
Arni